10.03.2026 OS.No.168/2022 PW2 Name :.**கருணாகரன்**

குறுக்கு விசாரணை

1. நான் 7ம் வகுப்பு படித்துள்ளேன். வழக்கு சொத்தின் அசல் ஆவணத்தை நான் பார்த்தது இல்லை. வழக்கு சொத்து 3 அயிட்டங்கள் ஆகும். 2வது அயிட்ட சொத்தின் சர்வே எண்.326 ஆகும். அதில் மொத்தம் எவ்வளவு சொத்து உள்ளது என்பது எனக்கு தெரியாது. வழக்கில் அதில் 33 செண்ட் உள்ளதாக குறிப்பிட்டுள்ளேன். அவ்வாறு சர்வே எண். 326ல் 33 செண்ட் சொத்து எதுவும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. அந்த சொத்திற்காக தான் ஒப்பந்தம் போட்டுள்ளேன்.
2. 3வது அயிட்ட சொத்தின் சர்வே எண் 327. அதன் மொத்த விஸ்தீரணம் 50 செண்ட். அதில் 2 ஏக்கர் 48 செண்ட் தான் உள்ளது என்று சொன்னால் அதுபற்றி நியாபகம் இல்லை. மேற்கில் பெருமாள் சொத்தும், வடக்கில் வெங்கடேசன் சொத்தும், கிழக்கில் ஐயர் நிலமும், தெற்கில் சேகர் நிலமும் உள்ளது. வழக்கில் அந்த செக்குபந்தி விவரத்தை குறிப்பிட்டுள்ளேன். வழக்குரை சொத்து விவரத்தில் சர்வே எண்.327க்கு செக்குபந்தி குறிப்பிடவில்லை. வழக்கு சொத்தில் 6 சதுரத்தில் வீடு உள்ளது.
3. 25.02.2022 லிருந்து அந்த வீட்டில் இருக்கிறேன். அந்த வீட்டு வரியை என் பெயரில் மாற்றுவதற்கு பஞ்சாயத்தில் மனு செய்தேன். மின் இணைப்பு விஜயன் பெயரில் தான் உள்ளது. அந்த வீடு கட்டுவதற்கு சுமார் 10 லட்சம் செலவு ஆகியிருக்கும். ஒப்பந்தத்தில் எந்த வீட்டையும்

எழுதவில்லை. வா.சா.ஆ.1 ஒப்பந்தத்தை சாரதி என்பவர் என்னிடம் கொடுத்தார். அதில் முருகானந்தம், செந்தில்குமார், தட்சணாமூர்த்தி ஆகியோர்கள் சாட்சிகளாக கையெழுத்துகள் போட்டுள்ளார்கள் தட்சணாமூர்த்தி சங்காரபுரம் பஞ்சாயத்தில் முன்னால் தலைவர் ஆவார். நானும் அவரும் சேர்ந்துதான் வா.சா.ஆ.1 ஒப்பந்தம் தயார் செய்தோம் என்றால் பிரதிவாதியும் வந்திருந்தார்.

4. என்னுடன் உடன் பிறந்தவர்கள் 4 ஆண்கள் 1 பெண் ஆவார்கள். என்னுடைய தகப்பனார் எந்த சொத்துகளையும் விட்டு செல்லவில்லை. எங்கள் நான்கு பேருக்கும் பிரதிவாதிதான் திருமணம் செய்து வைத்தார். கடந்த 2 மாதத்திற்கு முன் தான் கிராவல் மண் திருட்டு தொடர்பான அம்பலூர் காவல்நிலையத்தில் என்மீது வழக்கு போட்டார். பிரதிவாதி என்னுடைய மூத்த அண்ணன். பிரதிவாதி எப்படி கையெழுத்து போடுவார் என்பது எனக்கு தெரியாது.

5. ஒப்பந்தத்தில் உள்ள கையெழுத்தை ஆய்விற்கு அனுப்புவதற்கு எனக்கு ஆட்சேபனை இல்லை. பிரதிவாதியிடம் நான் பணம் கொடுத்துள்ளதற்கு எழுத்து மூலமான வேறு ஆவணங்கள் எதுவும் இல்லை. தட்சணாமூர்த்தி என்பவர் சரவணன் என்ற பெயரில் முன்னால் பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு தலைவராக இருந்தார். சுமார் 20 ஆண்டுகளாக அவருக்கு நான் தேர்தல் வேலை செய்கிறேன். பிரதிவாதியின் மனைவி பஞ்சாயத்து தலைவர் பதவிக்கு போட்டி போட்டபோது அவருக்கு எதிராக போட்டியிட்ட சரவணனுக்கு தான் நான் ஆதரவு கொடுத்தேன்.

6. 1வது அயிட்ட சொத்தில் 1 செண்ட் கடந்த 2022ல் ரூ.10,000/- மதிப்பு பெறும். 2, 3 அயிட்ட சொத்துகளும் அதே மதிப்பு பெறும். வழக்கு சொத்தில் உள்ள பம்புசெட்டின் மதிப்பு சுமார் ரூ.50,000/- போகும். வழக்கு சொத்தில் உள்ள கிணற்றின் மதிப்பு ரூ.2 லட்சம் போகும். பிரதிவாதி வீட்டில் வைத்து தான் ஒப்பந்தம் பேசபட்டது. 25.05.2022ல் நான் பிரதிவாதி, தட்சணாமூர்த்தி, செந்தில்குமார், முருகானந்தம் ஆகிய அனைவரும் பேசினோம். அப்போது மாலை சுமார் 6.30 மணி இருக்கும். பத்திர எழுத்தர் சாரதியிடம் பிரதிவாதி தான் என்னை கூட்டிச்சென்றார். பிரதிவாதி தான் முத்திரை தாள் வாங்கிவந்தார்.
7. என் பெயரில் தான் முத்திரை தாள் வாங்கபட்டது. சாரதியிடம் முத்திரை தாள் வாங்கபட்டது. ஒரு 20 ரூபாய் முத்திரை தாள் மட்டும் தான் வாங்கபட்டது. மூன்று மாத காலத்திற்குள் ஒப்பந்தத்தை நிறைவேற்ற வேண்டும் என ஒப்பந்தத்தில் எழுதபட்டுள்ளது. தவறினால் என்ன நிபந்தனை என்பது எனக்கு தெரியவில்லை. வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொத்தின் செக்குபந்தி விவரம் எழுதபடவில்லை என்றால் நியாபகம் இல்லை. பிரதிவாதி வீட்டிற்கு என் தரப்பில் சாட்சி தட்சணாமூர்த்தியை நான் கூட்டி கொண்டு சென்றேன் வேறு யாரையும் நான் கூட்டி கொண்டு செல்லவில்லை.
8. சாட்சி முருகானந்தத்திற்கும் எனக்கும் எந்த பிரச்சனையும் இல்லை. என் தரப்பில் கூப்பிட்டால் அவர் சாட்சியம் அளிக்க வருவார். சுமார் 20 ஆண்டுகளாக அவர் எனக்கு பழக்கம். சாட்சி செந்தில் சுமார் 15 ஆண்டுகளாக பழக்கம். கட்சி மூலமாக அவர் பழக்கம். முருகானந்தத்தை தவிர மற்றவர்கள் கட்சி மூலமாக பழக்கம். பிரதிவாதி

சொத்தை அபகரிப்பதற்காக வழக்கு ஒப்பந்தம் மோசடியாக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. என்னுடைய பெயரில் ஸ்டேட் பேங் மற்றும் யூனியன் வங்கியில் வங்கி கணக்கு உள்ளது.

9. சுமார் 10 ஆண்டுகளாக உள்ளது. 2 வங்கி கணக்குகளிலும் மொத்தமாக ரூ.50,000/- நான் டெபாசிட் செய்து எடுத்துள்ளதாக விவரம் இல்லை என்றால் உள்ளது. வங்கி கணக்கு புத்தகங்களில் அந்த பதிவு உள்ளது. வா.சா.ஆ.1 ஆவண தேதியில் வங்கியிலிருந்து பணம் எடுத்ததாக நியாபகம். நான் எந்த பணமும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. வங்கி கணக்கு ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். வா.சா.ஆ.1 ஆவண தேதிக்கு பின் பிரதிவாதியிடம் எனக்கு எந்த பேச்சுவார்த்தையும் இல்லை. வழக்கு தாக்கல் செய்யும் வரை அவரை நான் நேரில் சந்திக்கவில்லை என்றால் பார்த்துள்ளேன்.

10. நான் தனிபட்ட முறையில் பேச்சுவார்த்தை வைத்துக்கொள்ளவில்லை. வா.சா.ஆ.1 ஆவணம் மோசடியாக தயார் செய்யபட்டது என்றால் சரியல்ல. எந்த ஆவணத்தை வைத்து வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள சொத்து விவரம் எழுதபட்டுள்ளது என்பது பத்திர எழுத்தருக்கு தான் தெரியும். வா.சா.ஆ.1 தயார் செய்யவதற்கு முன் கணினி சிட்டா எடுத்து பார்த்துள்ளோம். அதை வைத்துதான் எழுதபட்டது. அதனால் செக்குபந்தி எதுவும் எழுதவில்லை என்றால் எனக்கு நியாபகம் இல்லை. முத்திரை தாளை நான் கையெழுத்து போட்டு வாங்கி வா.சா.ஆ.1 ஆவணத்தை தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல.

11. முத்திரை தாள் விற்பனையாளரிடம் உள்ள ஆவணத்தில் என்னுடைய கையெழுத்து இருந்தால் நான் வாங்கிய முத்திரை தாள் ஆகும். மொத்த

விஸ்தீரணம் 1 ஏக்கர் 43 செண்ட் ஆகும். அதன் மதிப்பு ஒரு கோடியே 43 லட்சம் என்றால் சரிதான். அந்த சொத்தை அபகரிப்பதற்காக மோசடிதானமாக தயாரித்துள்ளோம் என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி ஆகவேண்டும் என்றால் சரியல்ல.

மேற்படி சாட்சியின் வாக்குமூலம் திறந்த 10/03/2026 இவ்வழக்கரங்கில் என்னால் சொல்ல சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காண்பிக்கபட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு கையொப்பம்/கைரேகை செய்யப்பட்டது.

RAJA B

SUBORDINATE JUDGE, VANIYAMBADI
Digitally signed by RAJA B
Location: THIRUPATHUR
Date: 2026.03.10 16:13:43 +0530

சார்பு நீதிபதி
வாணியம்பாடி.